**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

DVC.No.16/2025

தேதி: 24.07.2026

**<u>அ.சா.1– ரூக்குமணி க/பெ.ஜெய்சங்கர்</u>**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் MSW முதுகலைப்பட்டப்படிப்பு படித்துள்ளேன். என்னுடன் உடன் பிறந்தவர்கள் 4 பேர் என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்களில் எனது அண்ணன் கலெக்டர் ஆபிசில் தற்காலிக பணியாளராக வேலை செய்கிறார். அக்காவிற்கு திருமணம் ஆகி இல்லத்தரசியாக உள்ளார். தங்கைக்கும் திருமணம் ஆகி இல்லத்தரசியாக உள்ளார். தம்பி சென்னையில் பொறியாளராக வேலை செய்து வருகிறார். என் உடன் பிறந்தவர்களும் என் தாய்தந்தையரை நன்கு பராமரித்துக்கொள்வார்கள் என்றால்சரிதான்.

2. நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் கரூர் மாவட்ட மெடிக்கல் காலேஜ் மருத்துவமனையில் தற்காலிக கவுன்சிலராக 6 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன். அரசு அறிவிப்பு வெளியிட்டு MSW கல்வி தகுதி இருந்தால் தான் இந்த வேலைக்கு செல்லமுடியும் என்றால் சரிதான். எனக்கு சீனியர்கள் உள்ளார்களா என்றால் தற்காலிகமாக உள்ளார்கள். 10, 12 வருடம் தொடர்ந்து பணியாற்றுகிறார்களா என்றால் இல்லை ஒவ்வொரு வருடம் Ouste செய்து நீக்கி விட்டு புதிதாக சேர்ப்பார்கள். Ouste செய்து புதிதாக நியமணம் செய்த ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

3. எனது ஊதியத்தை எனது உயர் அதிகாரிகளை விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எனது ஊதியம் ரூ.18,000/– ஆகும். HIV ஏய்ட்ஸ் தொடர்பான கவுன்சிலர் பணி என்றால் சரிதான். 10, 12 வருடங்கள் தொடர்ந்து பணியாற்ற முடியுமா என்றால் பணியாற்றலாம் நீக்கினால் செல்ல வேண்டும். நான் முதுகலை பட்டதாரி, அரசு நிறுவனத்தில் பணி செய்வதால் என்னை நானே பராமரித்து கொள்ளமுடியும்எ ன்றால் சரிதான் தற்போது பார்த்து கொள்ள முடியும் இன்னும் 5 வருடம் கழித்து யார் பார்த்துக்கொள்வார்கள். 5 ஆண்டுகள் கழித்து யார் பராமரித்துக்கொள்வார்கள் என்று யூகத்தின் அடிப்படையில் சொல்வது என்றால் சரிதான் நாளைக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வது.

4. என்னை எனது கணவர் நல்லபடியாக பார்த்துக்கொள்கிறார் சேர்ந்து வாழ விருப்பமா என்றால் இல்லை என்னை நன்றாக பார்க்கவில்லை. நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ்ந்து வருவதற்கு எனது மாமியார், மாமனார் தடுப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் மாரியாயி ஜெய்சங்கரின் தாயார் இல்லையென்றால் சரிதான் அவருடைய சித்தி ஆவர்ர் எனது மாமனாருக்கு 2வது மனைவிஆவார். ஜெய்சங்கரின் தாயார் நீண்ட காலங்களுக்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

5. வழக்கு ஆதாயம் பெறுவதற்கு 2, 3 எதிர்மனுதாரர்களை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. திருமணம் நடந்து நான் அரசு ப்பணியில் இருந்ததால் நானும் எனது கணவரும் கரூரில் தனியாக வீடு எடுத்து தங்கினோம் என்றால் கொரோனா காலம் என்பதால் பஸ் இல்லாததால் கரூரில் தங்கினோம். தற்போது அதே வீட்டில் தங்கி செல்கிறேனா என்றால் ஆமாம் அம்மா வீட்டிற்கும் செல்வேன். கொரோனாவிற்காக கரூர் வீட்டில் தங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பணியில் சேர்ந்த நாள் முதல் எ னது கணவர் என்னுடன் தான் இருந்தார் என்றால் கொஞ்ச நாட்கள்தான் என்னுடன் இருந்தார்.

6. திருமணம் முடிந்து தாலி பிரித்து போடும் நிகழ்ச்சியில் நான் தாலிசெயின் அணிந்திருந்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் 3/4 பவுன் தாலி அணிவித்தார்கள் என்றால் சரிதான். தாலி கொடியில் உள்ள காசு எதிர்மனுதாரர்கள் தான் அணிவித்தார்கள் என்றால் சரிதான். எதிரிமனுதாரர் அணிவித்த தாலிசெயின் , தாலி, காசு ஆகியவை என்னுடன் உள்ளது என்றால் சரிதான் 1 பவுனுக்கு நான் காசு கொடுத்தேன். தாலிசெயினின் எடை 4 பவுன் என்றால் சரிதான். 1பவுனுக்கு நான் காசு கொடுத்தற்கு யார்முன்னிலையில் வைத்து கொடுத்தேன் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. நானும், 1ம் எதிர்மனுதாரரும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் தொடர்பான தகவல்களை எனது பெற்றோர்கள் தான் சொன்னார்கள் என்றால் எதிர்மனுதாரர் பெற்றோர் சொல்லி எனது பெற்றோர் சொன்னார்கள். எனக்கு திருமணம் 30வயதில் தான் நடைபெற்றது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தொடர்பான தகவல்களை சரியாகத்தான் சொன்னார்கள் என்றால் சரிதான். நான் பணிக்கு செல்லும்போது 1ம் எதிர்மனுதாரர் சைக்கிளை எடுத்துக்கொண்டு மருத்துவமனைக்கு வந்து என்னை கூட்டிச்செல்வார் என்றால் ஒரு நாள் கூட அழைத்துச்சென்றதில்லை. எதிர்மனுதாரர் ஒவ்வொரு நாளும் அழைத்துச்செல்ல வந்தார் என்றாலும் எனது கணவர் என்னுடன்

குறைவான படிப்பு படித்துள்ளதால் அவரை மரியாதை குறைச்சலாக இருக்கும்என்பதால் புறக்கணித்தேன் என்றால் சரியல்ல.

8. எனது கணவரின் ஆண்மை சம்பந்தமாக ஆவணம் நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அது பற்றி எனக்கு முன்பே தெரியும் என்றால் மறைத்துவிட்டார்கள். மேற்கண்ட மருத்துவஆவணம் மூலம் ஒரே தீர்வான முடிவுக்கு வரமுடியாது என்றால்சரியல்ல. எனது கணவருக்கு மருத்துவ சிகிச்சைக்கு தயாராக இருந்தார் என்றால் நான் சிகிச்சை அழைத்தேன் அவர் வரவில்லை. 2021 பிறகு எந்தெந்த மருத்துவரிடம் செல்லவேண்டும் என்று நான் அழைத்ததாக மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தனிக்குடித்தனம் இருந்த போது மளிகைச்சாமான்கள், காய்கறிகள் அளவுக்கதிகமாக வாங்கி போட்டார் என்றால் குறைவாகத்தான் வாங்கிப்போட்டார் அரிசி சாப்பிட முடியாது.

9. 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழும் போது வேலைக்கு சென்று வந்தார் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வேலைக்கு சென்றார் வீட்டுக்குதேவையான பொருட்களை வாங்கித்தந்தார் என்னுடைய சம்பாதியத்தை எங்கள் குடும்பத்திற்கு செலவு செய்யாமல் அப்பா அம்மா குடும்பத்திற்கு செலவு செய்தேன் என்றால் இல்லை எனதுகுடும்பத்திற்கு தான் செலவு செய்தேன். இதுவரை நான் 8 லட்சம் ஊதியம் பெற்றிருப்பேன் எனது குடும்பத்திற்கு செலவு செய்யாமல் எனது அப்பா அம்மா குடும்பத்திற்கு செலவு செய்தேன் என்றால் இல்லை நான் வேலைக்கு செல்லும் முதலில் ரூ 8000/-ம் மாதச்சம்பளம் வாங்கினேன்.

10. 6 ஆண்டுகளில் ரூ.18000/- சம்பளம் ஏறிவிட்டது என்றால் சரிதான். எனது கணவரை ஆரம்பத்தில் இருந்து புறக்கணித்து குடும்பத்திற்கு எந்த செலவு செய்யாமல் இருந்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் அவருடைய சம்பாத்தியத்தில் என்னை சந்தோசமாக வைததிருந்தார்எ ன்றால் சரியல்ல அப்படி இருந்தால் நான் கோர்ட்க்கு வந்திருக்கமாட்டேன். திருமணம் முடிந்த பிறகு இதுவரை 1ம் மனுதாரர் மற்றும் 2, 3 எதிர்மனுதாரர்கள் மீது காவல் நிலையத்தில எதாவது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை குடும்பம் என்றால் உடனே கொடுக்கமுடியாது. அப்படி ஒரு சம்பவமும் நடைபெறவில்லை அதனால் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

11. நாங்கள் இருவரும் Mutual Consent Divorce மனு தாக்கல் செய்தோம்ள ன்றால் சரிதான் முதல் வாய்தாவில் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று கணவர் சொன்னார் 2ம் வாய்தாவில் சேர்ந்து வாழ்கிறேன் என்று சொல்லி அதனால் தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது நான் விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மனுவில் 1ம்எ திர்மனுதாரர் தப்பான விளம்பரம் பார்த்து தப்பான மாத்திரை சாப்பிடுகிறார் என்று சொல்லியுள்ளதற்கு என்ன தப்பான விளம்பரம் பார்க்கிறார் மாத்திரை சாப்பிடுகிறார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

12. தப்பாக எனது கணவர் எதுவும் செய்யவில்லைஅதனால் தான் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல மாத்திரை போட்டுவிட்டு என்னை இரவு தூங்கவிடமாட்டார் வலி இருப்பதாக சொன்னாலும்விடமாட்டார். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஊரில் பஞ்சாயத்து பேசியதாக சொன்னதற்கு என்ன தேதியில் எந்தெந்த பஞ்சாயத்துகளில் பேசினோம் என்று மனுவில் விரிவாக சொல்லவில்லை என்றால் சரிதான். 05.05.2025ல் கரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனக்கு விவாகரத்து வழங்கமாட்டேன் என்கிறார் என்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான் அவர் கொடுத்த தொல்லைக்காகவும் கொடுத்தேன்.

13. புகார்மனுவை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் விவாகரத்து பெறுவதற்காகத்தான் இந்த புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் குடும்ப பின்னணி வசதியான குடும்ப பின்னனி என்றும் 1ம் எதிர்மனுதாரர் குடும்ப பின்னணி வசதியில்லாததால் பாகுபாடு காட்டினேன் என்றால் சரியல்ல எங்கள் குடும்பத்தை விட எனது கணவர் குடும்பம் வசதியானதாகும். என்னுடைய ஆடம்பர வாழ்க்கைக்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல நான் ஆடம்பரமாக வாழ விரும்பவில்லை. 1ம் எதிர்மனுதாரரை பொறுத்தவரை என்னுடன் சேர்ந்து வாழத்தான் விரும்புகிறார் என்றால் சரியல்ல.

14. நான் முதுகலை பட்டதாரி என்பதாலும் அரசு பணி செய்வதாலும் என்னுடைய தேவைகளை நானே பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்றாலும் அதனால் ஜீவனாம்சம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1முதல் 3 எதிர்மனுதாரர்கள் எந்த குடும்ப வன்முறையிலும் ஈடுபடவில்லை அதனால் நான் கேட்கும் நஷ்ட ஈடு கிடைக்கத்ததககதல்ல என்றால் குழந்தை இல்லாததாலும், நான் ஒல்லியாக இருப்பதாலும் என்னை எனது மாமனார், மாமியார் புறக்கணித்தார்கள். எனக்கு திருமணம் நடந்தது 2019 என்றால் சரிதான்.

15. 2019 லிருந்து இந்த மனு தாக்கல் செய்யும் வரை இந்த வன்கொடுமை நடந்ததாக எந்த புகாரும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஆதாயம் பெறும் நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/−திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.